முருகப்பெருமான் துணை

# வெகுவிரைவில் மழை பொழிந்து வெப்பம் தணிய அறிவுரை ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

13.04.2021, செவ்வாய்க்கிழமை

1. அருளாக அறமாக வந்தகுருவே
அவதாரம் என்வடிவாக வந்த திருவே
ஆறுமுகன் யான் அரங்கன் நீகேட்க
அருளுவேன் வெகுவிரைவில் மழைபொழிந்து
2. மழைபொழிந்து வெப்பம் தணிய அறிவுரை ஆசி
மார்க்கமுடன் சார்வரி ஆண்டு கடைநாளில் உரைப்பேன்
பார்த்துரைக்க பிலவ ஆண்டு பிறக்க இருக்க
பழுதில்லா மழைவளம் பெருகுமப்பா
3. அப்பனே சித்திரை கோடை என்றாலும்
அனல்மிகுந்த வெப்பகாலம் என்றாலும்
வெப்பம்தணிய அரங்கன் நீகேட்டதால்
விரைந்து மழைபொழிய பரிபூரண ஆசி
4. ஆசியுண்டு சித்திரை திங்களில்
அனலை தகர்க்கும் மிகுதிமழை வர்ஷிக்கும்
ஆசியுண்டு அரங்கன் வாழ் புவி நோக்கி
அறிவிப்பேன் மழை பொழிந்து வெப்பம் தணிய ஆசி
5. ஆசியுண்டு உலக உயிர்களெல்லாம்
அணுகுகின்ற வெப்ப தாக்கம் வேகம்குறைந்து
பேசிட மழைவளம் பெருகியே
புகலுவேன் பாதுகாப்பு பெற பரிபூரண ஆசி
6. ஆசியுண்டு தகர்திங்களில் வாராந்திரம்
அரங்கன் கேட்டதால் தமிழகம் முழுக்க இனிதே
பேசிடுவேன் மழைவளம் கண்டுமே
புகலவே வெப்பம் தணிய பரிபூரண ஆசி
7. ஆசிபெற்ற அரங்கன் சீடர் பெருமக்களும்
அறிவிப்பேன் மழைவளம் வருஷிக்க வேண்டி
நேசமுடன் நீர்மோர் அருட்கஞ்சி
நிலமதனில் தொடர்ந்து தானம் செய்து வர
8. செய்துவர என்வாக்கு சித்திக்கும்
சித்தர்களும் சூட்சுமமாய் வருனணை ஏவி
ஐய்யமற புவியை குளிர்வித்து மகிழ்விப்பர்
அரங்கன் தவதர்மத்தால் இந்த அற்புதம் நிகழும்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–